# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/13 - 2024 ජූලි මස 22 වැනි සඳුදා - 2024.07.22

*2394/13 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 இன் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரையை கருத்திற் கொண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் -

(அ) அமைச்சரவை, அதன் 2024, யூலை 09 ஆம் திகதியுடைய 24/1304/631/032 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட நபரின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது எனவும்;

(ஆ) அத்தகைய வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம்நிலை வியாபாரமாகக் கருதுவதற்கான காரணம் இதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகவுள்ளது எனவும்;

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்புட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகவிருத்தல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஈ) குறிப்பிடப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதன் அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 19.*


1A - PG 6779 — 289 (2024/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிக்கப்பட்ட வியாபாரத்தின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர் | க்ரியேடிவ் சொப்ட்வெயார் (பிரைவேட்) லிமிடெட்<br>(CREATIVE SOFTWARE (PVT) LTD) |
| 2. | உரிம இலக்கம் | 2402160047 |
| 3. | உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2024 மாச்சு 20<br><br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல், அதிகாரமளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்) |
| 4. | கரைகடந்த கம்பனி பதிவிலக்கம் | PCC00295415 |
| 5. | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபார வகைப்படுத்தல் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் |
| 6. | விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான தகவுடமை | CREATIVE SOFTWARE (PVT) LTD என்பது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளது. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாக எச்சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 7. | தகவுடமைக் கட்டளைகள் | 2023 ஓகத்து 04 ஆம் திகதியுடைய 2343/ 60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டு நெறிகள்) ஒழுங்குவிதிகளின் 4(2) (ஈ) மற்றும் 4(3) (ஆ) ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்ட கட்டளைகள். |
| 8. | ஏற்புடைய விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டு நெறிகள்) ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிட்ட திட்டம் |

## அட்டவணை II

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக கருத்தில் கொள்ளப்படுவதற்கான காரணம்**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், அச்சட்டத்தின் பிரிவு 53(5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை ஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.*

CREATIVE SOFTWARE (PVT) LTD *என்பது இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும் என்பதோடு அது சுவீடன், நோர்வே, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பரந்த அளவிலான வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குகின்றது.* CREATIVE SOFTWARE *நிறுவனம் நிலையான தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, கையடக்கத் தொலைபேசி செயலிகள் விருத்தி மற்றும் தரவுப் பொறியியல் மற்றும் பகுப்பாய்வு போன்ற சேவைகளை வழங்குகிறது.*

CREATIVE SOFTWARE (PVT) LTD *நிறுவனம் கொழும்புத் துறைமுக நகரத்தில் கரைகடந்த மென்பொருள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தை நிறுவ உத்தேசித்துள்ளது என்பதோடு முக்கியமாக ஸ்கண்டிநேவிய சந்தைக்கு சேவைகளை ஏற்றுமதி செய்கிறது. நிதித் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் இ-வர்த்தகம் போன்ற மென்பொருளை உருவாக்குதல் மற்றும் மென்பொருள் துறையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவு சேவைகளை வழங்குதல் போன்ற தொழில்களுக்கு இந்த சேவைகளை வழங்குவதாக இருக்கும். கடன் மற்றும் ஒப்புரவு நிதிப்படுத்தல் (*Debt and Equity funding*) ஊடாக 250,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆரம்ப வெளிநாட்டு நேரடி முதலீட்டில்,* CREATIVE SOFTWARE (PVT) LTD *நிறுவனம், கொழும்புத் துறைமுக நகரத்தில் செயல்படும் முதல் ஆண்டில் அண்ணளவாக 575,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை ஈட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.* CREATIVE SOFTWARE (PVT) LTD *செயல்பாடுகளைத் தொடங்கிய 5 ஆண்டுகளுக்குள் 200 பணியாளர்களை பணியமர்த்துவதன் மூலம் கணிசமான வேலை வாய்ப்புக்களை உருவாக்க விரும்புகிறது. முதல் ஆண்டில் 100 பணியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள். அதை தொடர்ந்து வரும் 2, 3, 4 மற்றும் 5 ஆண்டுகளில் முறையே 25 பணியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள். வழங்கப்படும் சில சேவைகள் வளப் பொருக்கம், மென்பொருள் பொறியியல், தனிப்பயன் மென்பொருள் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு மற்றும் பெரிய தரவு, கிளவுட் மற்றும் உட்கட்டமைப்பு, வினாக்கல் மற்றும் மறுமொழிகள் மற்றும் சோதனை செய்தல் போன்றவையாகும்.*

## அட்டவணை III

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள்**

| | சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | | வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் |
|---|---|---|---|
| 1. | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | அ) | பகிர்ந்தளிக்கப்படுகின்ற சகல வருமானம், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவை இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும் |
| | | ஆ) | மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளும் இந்த சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 2. | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் | | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும். |

**அட்டவணை III** *(தொடர்ச்சி)*

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | | வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் |
|---|---|---|
| 3. | 2022 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்களின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 6. | சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 7. | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்களின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 8. | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்களின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 9. | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட மாட்டாது. |
| 10. | 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 11. | களியாட்ட வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக் கள் வழங்கப்படமாட்டாது. |
| 12. | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2022,யூன் 03 ஆம் திகதியுடைய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டு நாணய மாற்றல் (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர இச்சட்டத்தின் சகல எற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. | 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குவிதி) சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது. |

**அட்டவணை IV**

**வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம்**

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|---|
| 1 | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 2 | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 3 | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 4 | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 5 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 6 | சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 7 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 8 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 9 | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10 | 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 11 | களியாட்ட வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 13 | 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குவிதி) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 07-0207

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.